S.C.No. 41/2019
Date : 10.03.2026.
(1, 2 எதிரிகள் ஆஜர்.)

அ.சா.15 டாக்டர் S.ராஜா, த/பெ.சுப்பையா

<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:–</u>

நான் 15 ஆண்டுகளாக அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் என் தகப்பனாருடன் இணைந்து பணிபுரிந்து கொண்டிருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை மட்டும்தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். காயம்பட்டவர் ஒரு கொடிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு எனது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் அது குறித்து உரிய காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும் என்பது கு.வி.மு.ச. பிரிவு 357(c) ன்படியும் இதச பிரிவு 166 ன் படியும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியும். அ.சா.ஆ.12 ல் கத்தியால் காயம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.12 ல் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.12 ல் அனுமதிக்கப்பட்ட தேதிதான் என்றும் அதில் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்த தேதி துலங்காது என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் மருத்துவமனைக்கு காயம்பட்டவர் பரத் என்பவருடன் 06.01.2014 ம் தேதி இரவு சுமார் 09.30 மணிக்கு நானும் என் தகப்பனாரும் பணியில் இருந்தபோது வந்ததாகத்தான் என் முதல் விசாரணையில் துலங்கும் என்றால் சரிதான். அவ்வாறு ஒருவர் காயம்பட்டு எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போதே விபத்து பதிவேடு பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் அவ்வாறு

அவர் அனுமதிக்கப்படும்போதே விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.12 ல் காயம்பட்டவரின் காயத்திற்கு ஏற்கனவே முதலுதவி சிகிச்சை எதுவும் எடுத்ததாக துலங்காது என்றால் சரிதான். அ.சா.ஆ.12 ன்படி சம்பவம் 06.01.2014 ம் தேதி மாலை 03.30 மணிக்கு நடந்ததாக துலங்கும் என்றால் சரிதான். நானும் எனது தகப்பனாரும் பரிசோதித்த காயம்பட்ட நபருக்கு சுமார் 12 மணி நேரம் வரை மேற்படி காயத்திற்கு முதலுதவியோ சிகிச்சையோ எடுக்காமல் இருந்திருந்தால் அவர் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்கு முன்புகூட ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருக்கும்போது போலிசார் என் தகப்பனாரை விசாரித்தார்கள். என்னை போலிசார் என் தகப்பனார் 2017 ம் ஆண்டு காலம் சென்றபின்னர் சுமார் 4 ஆண்டுகள் கழித்து விசாரித்தார்கள். அ.சா.ஆ.12 ல் காயம்பட்ட நபர் 07.01.2014 அன்று காலை 04.00 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாகத்தான் துலங்கும் என்றால் சரிதான். மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு வேறு என்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட விபத்து பதிவேடு வேறு என்றும் அ.சா.ஆ.12 வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காயம்பட்டவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும்போது என்

தகப்பனாருடன் உடன் இருந்ததாகவும் அதனால் மருத்துவ பரிசோதனை விவரங்கள் தெரியும் என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**